## இயற்றி இசை அமைத்தவர்:

## மகாவித்துவான் பிரம்மஸ்ரீ N. .வீரமணி ஐயர் அவர்கள் (இணுவில்)

### கல்வித் தெய்வம் அவள் தானடி தோழி

நல்வித்தை யாவும் தருவாளாடி (2 )

பலவிதமாக நாம் பாடுவோம் வாணியின்

பாதம் பணிந்திடுவோம் வாருங்கடி (2 )

(கல்வித்தெய்வம்)

வேண்டாமரைதனில் வீற்றிருப்பாளாடி

வீணா கானம் செய்வாளாடி (2 )

கொண்டாடிப் பாடிடுவோம் தண்டாமரைப் பாதம்

கண்டானந்தம் கொண்டு ஆடுங்கடி (2 )

(கல்வித்தெய்வம்)

தீபங்கள் ஏற்றிடுவோம் ஆரத்தி செய்திடுவோம்

தீந்தமிழ் வாணிபுகழ் பாடிடுவோம் (2 )–

பாவங்கள் தீர்ப்பாளடி வேதங்கள் போற்றும்படி

கீதம் இசைக்க வரம் ஈவாளாடி (2 )

(கல்வித்தெய்வம்)

தேவி சரஸ்வதியின் தே(ன்)மலர்ச்சேவடியை

பாமலர் நித்தம் தூவிப் பாடிடுவோம் (2 )

நாவில் உறைவாளடி நல்வாழ்த்துச் சொல்வாளடி

வாணி சரஸ்வதியை வாழ்த்துங்கடி (2 )

(கல்வித்தெய்வம்)

வெள்ளைக் கலையுடுத்து அன்னந்தனில் அமர்ந்து

வண்ணத் தமிழ் ஏடேந்தி வருவாளடி (2 )

உண்மைக் கவிஞரது உள்ளக் கமலத்தில்

உவந்து களித்து நடம் புரிவாளடி (2 )

(கல்வித்தெய்வம் )

மங்களப் பண்பாடி பங்கயப் பதம்போற்றி

மங்கையர் நாம் கூடி ஆடிடுவோம் (2 )

மங்களம் பொங்கிடுமே இன்பங்கள் தங்கிடுமே

மாது கலைமகளை வாழ்த்திடுவோம் (2 )

(கல்வித்தெய்வம் )